(அ) திருச்சி மாவட்டம் கரூர் அரசினர் மாணவியர் விடுதி தற்போது இயங்கி வரும் இடத்தை காலி செய்ய வேண்டுமென கோர்ட் தீர்ப்பு வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) சென்னை உயர்நீதி மன்றம் கரூரில் உள்ள விடுதியினை 30–4–1981-க்குள் காலி செய்யும்படி தீர்ப்பு அளித்துள்ளது.

(ஆ) சென்னை உயர் நீதி மன்றத்தின் தீர்ப்புப்படி திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூரில் உள்ள அரசு ஆதி திராவிட மாணவியர் இல்லம் ஜவஹர் பசாரில் 578 கதவு எண் உள்ள வேறொரு வாடகை கட்டிடத்திற்கு 16–3–1981 அன்று மாற்றப் பட்டுவிட்டது.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது மாற்றப்பட்டுள்ள இந்த மாணவியர் இல்லம் மிகவும் சந்தடியான பசாரில் உள்ள நெருக்கடியான இடத்தில் இருக்கிறது. ஆகவே, அதற்கென்று அரசாங்கச் சொந்தமான இடத்தை வாங்கி, சொந்தமாகவே கட்டிடம் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே என்னுடைய கட்சியின் சார்பாகவும், மற்ற பல கட்சிகள் சார்பாகவும் மதுரை இன்ஜினீயரிங் கல்லூரியில் நடைபெற்ற இரண்டு மாணவர்கள் கொலை பற்றி. . .

(கூச்சல்–குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதுரை என்ஜினியரிங் கல்லூரியில் நடைபெற்ற சம்பவம் குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் இன்றைக்கு எடுத்துக் கொள்வதாக இருந்தேன். ஏனென்றால், 30 பேர்கள் அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், நிலக்கரி பற்றாக்குறை பற்றி ஒரு பெரிய பிரச்னை பத்திரிகைகளிலே வந்துவிட்டது என்று எல்லாக் கட்சித் தலைவர்களும் குறிப்பிட்டதனால் அதுபற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தை இன்று எடுத்துக் கொள்ள இருக்கிறேன். (குறுக்கீடுகள்) நிலக்கரி இன்றைக்கு வேண்டாமென்றால் நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்—(குறுக்கீடுகள்) இன்று காலையிலே எல்லாக் கட்சித் தலைவர்களும் என்னுடைய அறைக்கு வந்து நிலக்கரி பற்றிய பிரச்சனைக்கு முன்னிடம் தந்து இன்று எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். கட்சித் தலைவர்களின் வேண்டுகோள் படி இன்றைக்கு நிலக்கரி பற்றி எடுத்துக் கொள்ள முடிவு செய்தேன். (குறுக்கீடுகள்) ஒரு நாளைக்கு ஒரு தீர்மானம்தான் எடுத்துக் கொள்ளப் பெறும்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இன்றியமையாத இரண்டு தீர்மானங்களை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும்போது அவை முன்னவர் விதியைத் தளர்த்த வேண்டுமென்ற பிரேரணையை முன்மொழிந்து, அதை இந்த அவை ஏற்றுக்கொள்வது மரபாக இருந்து வருகிறது. அதை அவை முன்னவர் கடைபிடிக்கத் தாங்கள் வழி வகுத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : விதியை இன்று மட்டும் தளர்த்துவதற்கு இந்த அவையினுடைய அனுமதியைத் தாங்கள் கோரலாம், இதையே முன்மாதிரியாகக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இன்றைக்கு இந்த விதியைத் தளர்த்தி இரண்டு ஒத்தி வைப்புத் தீர்மானங்களைத் தாங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு மட்டும் என்றால் பரவாயில்லை. (குறுக்கீடு) எனக்கிருக்கிற சிரமத்தை எதிர்க்கட்சித் தலைவர் உணர்ந்து கொள்ள வேண்டும். அந்தப் பக்கம் 4, 5 கட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள். அந்த 5 கட்சித் தலைவர்களும் ஒவ்வொரு மானியத்திலும் பேச வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதைத் தவறு என்று நான் சொல்லவில்லை. பேசுவதற்கு நேரம் இல்லை. மானியத்திற்கு 2 நாட்கள் ஒதுக்குகிறோம் என்றாலும் வினாக்கள் விடைகள் முடிந்து விவகாரங்கள் முடிந்து ஒத்தி வைப்புத் தீர்மானம் முடிந்து, கவனஈர்ப்புத் தீர்மானம் முடிந்து, மானியக் கோரிக்கை விவாதத்தை எடுத்துக்கொள்ளும்போது, மணி 11–30 ஆகிவிடுகிறது......

திரு. என். எஸ். வி. சித்தன் : பிற்பகலிலும் அவையை வைத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தயாராக இருக்கிறீர்கள். எல்லாக் கட்சித் தலைவர்களும் தயாராக இல்லை. எப்படி உங்கள் வேண்டுகோளை நான் ஏற்க முடியும்? எல்லாக் கட்சித் தலைவர்களையும் நீங்கள் வேண்டுமானால் கன்வின்ஸ் பண்ணுங்கள். தினசரி மாலையிலும் பேரவையை வைத்துக் கொள்ள எனக்கு ஆட்சேப்பணை இல்லை. இரவு 12 மணி வரைக்கும் அல்லது 2 மணி வரைக்கும் நடத்த வேண்டுமென்று சொன்னால் கூட நான் பேரவையை நடத்தத் தயார். அது வேறு. இருக்கிற சூழ்நிலையிலே என்ன செய்யலாம் என்று யோசனை செய்ய வேண்டும்; மானியக் கோரிக்கையிலே பேசும்பொழுது ஒவ்வொரு கட்சித் தலைவரும் எனக்கு நேரம் கொடுக்கவில்லையென்று கோபித்துக் கொள்கிறார்கள். கட்சித் துணைத் தலைவர்களும் எங்களை மதிக்கவில்லையென்று கோபித்துக் கொள்கிறார்கள். பின்னால் இருப்பவர்களும் எங்களை விட்டு விட்டார்களென்று கோபித்துக் கொள்கிறார்கள். கோபித்துக் கொள்கிற உரிமை எல்லோருக்கும் இருக்கிறது, ஆனால் இருக்கிற சூழ்நிலை என்ன? நேரம் இருந்தால் ஒரு நாளில் இரண்டு ஒத்தி வைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்வதிலே எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஒரு ஒத்திவைப்பு தீர்மானத்தை எடுத்துக் கொண்டால் கூட 45 நிமிடங்கள் தேவைப்படுகின்றன.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இன்றைய தினம் இரண்டு ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் என்ற அடிப்படையிலே அந்த எண்ணத்தைக்கொண்டு செல்வதை விட, இன்றைய தினம் அரசாங்கத்திற்கு நெருக்கடியான ஒரு கட்டம், மின்சாரத் துறையிலே ஏற்பட்டுவிட்ட காரணத்தாலே அதை ஒரு சிறப்புத் தீர்மானமாகத் தாங்கள் கருத வேண்டும்.

மற்றொன்று, கட்சிகளுக்கு உறுப்பினர் எண்ணிக்கை அடிப்படையிலே நேரங்களைப் பங்கிட்டுத் தருகிற ஒரு முறையை வைத்துக் கொண்டு, அதற்கு மேலே 5 நிமிடம், 10 நிமிடம் சபாநாயகர் அவர்கள் சலுகை காட்டுவது என்ற ஒரு முறைதான் அடிப்படையிலே பின்பற்ற வேண்டியது என்று நான் பலமுறை கேட்டுக் கொண்டிருக்கிறேன். அந்த முறையிலே அந்தப் பங்கீட்டு நேரம் இந்த அவையிலே அறிவிக்கப்பட்டுவிட வேண்டும். பாராளுமன்றத்திலே இருக்கிற முறைபோல், அதற்குமேலே தாங்கள் சலுகை காட்டலாமே தவிர, அடிப்படை நேரத்திலேயே, ஒவ்வொரு முறையும் பங்கிடுகிறபொழுது, ஏதாவது ஒரு காரணத்தாலே, சில கட்சிகள் அதிக நேரம் எடுத்துக்கொள்கிற நிலைமை வளருவது, போத்தமாக விவாதத்தை நீடிப்பதற்குக் காரணமாக இருக்கிறது. ஆகவேதான் அந்த நேரப் பங்கீட்டை முறைப்படுத்தி அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது இருக்கிற நடைமுறை என்னவென்றால், பெரிய கட்சிகளுக்கு அவரவர்களுக்கு உரிய நேரத்தைக் கொடுத்துவருகிறோம். சிறிய கட்சிகளுக்கும் அவர்களுக்குரிய நேரத்தைக் கொடுத்து திருப்திபடுத்துகிறோம். பெரிய கட்சிகள் தங்கள் நேரத்தைக் கொஞ்சம் விட்டுக் கொடுக்க வேண்டும்—தியாகம் செய்ய வேண்டும் என்றால் பிரச்னை வந்துவிடும். ஆகவே அந்த நிலைக்குப் போகாமல் இருக்கிற நேரத்தைக் கணக்கிட்டு ஓரளவு பங்கிட்டுக் கொடுத்து பிரச்னை எழாமல் அவையை நடத்திச் செல்ல வேண்டியதாக இருக்கிறது. எனவேதான் கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவரையும் கூப்பிட்டு, நேற்று அந்த மானியத்திலே அந்தக் கட்சி பேசியது, இந்த மானியத்திலே நீங்கள் பேசுங்கள் என்பதாகக் கேட்டுக் கொண்டு அவர்களைச் சமாதானப்படுத்தி அவையை நடத்திச் செல்கிறோம். அவர்களும் ஒத்துழைப்புத் தந்து வருகிறார்கள். அடுத்து கட்சித் தலைவர்களது வேண்டுகோளுக்கிணங்க, அவசரம் முக்கியத்துவம் கருதி இரண்டு ஒத்தி வைப்புத் தீர்மானங்களையும் இன்றைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

3. அரசினர் தீர்மானம்.

விதி 58-ஐத் தளர்த்தல்.

[முற்பகல் 10–30.]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' ஒரு நாள் கூட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானம் விவாதிக்கப்பெறலாகாது என்கிற தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதி 58–ஐ இன்று தளர்த்த வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

(அ) மதுரை தியாகராயா பொறியியல் கல்லூரி மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலில் இரு மாணவர்கள் மரணம் அடைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : '' மதுரையை அடுத்துள்ள திருப்பரங்குன்றத்தில் தியாகராயா பொறியியல் கல்லூரியின் இரு மாணவர்கள் பிரிவுக்கிடையே மோதல் ஏற்பட்டதன் விளைவாக இரு மாணவர்கள் மரணம் அடைந்துள்ளதால்